Name of the Newspaper ........ TAMIL HINDU ........ Date: .......

## சென்னை சென்ட்ரல் உட்பட பல்வேறு இடங்களில்

# மெட்ரோ ரயில் நிலையங்களில் இறுதிகட்ட பணிகளை அமைச்சர் ஆய்வு

■ சென்னை

சென்னை சென்ட்ரல் உட்பட பல்வேறு இடங்களில் நடந்து வரும் மெட்ரோ ரயில் நிலையங்களின் இறுதிக்கட்டப் பணிகளை அமைச்சர் எம்.சி.சம்பத் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

சென்னையில் 2 வழித்தடங்களில் மொத்தம் 45 கிமீ தூரத்துக்கு மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில், 24 கிமீ தூரத்துக்கு (19 ரயில் நிலையங்கள்) சுரங்க வழிப்பாதை வழியாக இயக்கப்படவுள்ளது. இதுவரையில் 28 கிமீ தூரம் பணிகள் முடிந்து ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளது. திருமங்கலத்தில் இருந்து நேரு பூங்காவுக்கு கடந்த ஆண்டில் சுங்கப் பாதையில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டது.

**இன்னும் 3 மாதங்களில்...**

எஞ்சியுள்ள நேரு பூங்கா, எழும்பூர் மற்றும் சென்ட்ரல் மற்றும் அண்ணாசாலை வழியாக விமானம் நிலையம் இணைக்கும் வகையில் இறுதிக்கட்டப் பணிகள் நடந்துக் கொண்டிருக்கின்றன.

இன்னும் 3 மாதங்களில் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து எழும்பூர், கோயம்பேடு வழியாக விமான நிலையத்துக்கு மெட்ரோ ரயில் இயக்கப்படவுள்ளது.

இந்நிலையில், தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் சைதாப்பேட்டை – டிஎம்எஸ், நேரு பூங்கா - சென்ட்ரல் சுரங்கப்பாதையில் நடக்கும் மெட்ரோ ரயில் நிலையங்களின் பணிகளை நேற்று ஆய்வு செய்தார். பணிகளை விரைவில் முடித்து, பயணிகள் சேவை தொடங்குவதற்கான பணிகளை விரைவுப்படுத்த வேண்டுமென மெட்ரோ ரயில்வே நிறுவன அதிகாரிகளிடம் வலியுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பங்கஜ்குமார் பன்சல் உட்பட அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.



▲ சென்னை சென்ட்ரல் உட்பட பல்வேறு இடங்களில் நடந்துவரும் மெட்ரோ ரயில் நிலையங்களின் இறுதிக்கட்டப் பணிகளை அமைச்சர் எம்.சி.சம்பத் நேற்று ஆய்வு மேற்கொண்டார். சென்னை மெட்ரோ ரயில் நிறுவன நிர்வாக இயக்குநர் பங்கஜ்குமார் பன்சல், இயக்குநர் (திட்டங்கள்) திரிவேதி, வி.கே.சிங் தலைமை பொதுமேலாளர் (சுரங்கம்) உட்பட பலர் உடனிருந்தனர்.